அமுல் நடத்துவது பாதிக்கப்பட்டுவிடும். ஆகையால் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுடைய பரிந்துரையினை ஆராய்ந்து பார்த்து, அரசு நல்ல முடிவு எடுத்து ஒரு கூடுதல் உதவியாளர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்சினையைப்பற்றி இந்த அரசு மறு பரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Family Benefit Scheme.

* 145. *Q.*—THIRU D. SANTOSHAM and Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the benefits of the Family Benefit Scheme are denied to teachers in Private Colleges, whereas they are applicable to teachers in Private Schools; and

(b) if so, the reasons therefor?

குடும்ப நல நிதித் திட்டம்

திரு. டி. சந்தோஷம் & திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின் பயன்கள் அளிக்கப்படும்போது, தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்கு அத்திட்டத்தின் பயன்கள் மறுக்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆயுள் ஈட்டு கார்ப்பரேஷன் விதிகளுக்கு விலக்கு அளிக்காமல் குடும்ப நற்பயன் நிதி திட்டத்தை எல்லாத் தரப்பினருக்கும் விரிவுபடுத்தப் படுவது தவறு என்று மத்திய அரசு கருதுவதாகக் கூறப்படுகிறது. அதனால் இன்னமும் மேற்சொன்ன திட்டம் தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை.

திரு. டி. சந்தோஷம் : தனியார் பள்ளியிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இது அமுல்படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் கிட்டத்தட்ட அதே நிலையில் உள்ள தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தத் திட்டம் அவர்களுக்கு ஏன் அமுல்படுத்தப்படவில்லை ?

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற்றாலொழிய, அதை அவர்களுக்கும் விரிவுபடுத்த இயலாது. அதற்காக முயற்சிகளை அரசு ஆராய்ந்து மேற்கொள்ளலாம்.

திரு. பி. ஆர். தாமஸ் : தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்த ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் பள்ளி ஊழியர்களுக்கு அந்தத் திட்டம் அமுல் நடத்தப்படுகிறது. ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்திலிருந்து இன்னும் விதிவிலக்குப் பெறவில்லை. அதைப் பெறுவதற்குமுன் குடும்ப நல நிதித் திட்டத்தை அமுல்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : சர்விசிலே இருக்கும்போது இறந்தால்தான் நாம் பணம் கொடுக்கிறோம். அரசு அந்தத் திட்டத்தினால் அதிகப் பணம் செலவாகும் என்று அஞ்சி, அதை அமுல் நடத்தாமல் இருக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மத்திய அரசு ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்தின் கீழ் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறது. அதனால்தான் விரிவாக்க முடியவில்லை. அந்த ஆட்சேபணையிலிருந்து விடுபட விதிவிலக்குப் பெற வேண்டும். அப்படி விதிவிலக்குப் பெற்ற பிறகுதான், விரிவுபடுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : இந்த மாநில அரசின் கீழ் வேலை பார்க்கின்ற மாநில அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு இத்தகைய திட்டங்களைக் கொண்டு வர முழு உரிமை இருக்கிறது. இதிலே மத்திய அரசு மாநில அரசு அதிகாரங்களில் தலையிடுவதாக இருக்கிறது. மாநில அரசு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தத் திட்டத்தை அனுமதிக்கிறது. மத்திய அரசு அனுமதியில்லாது, மாநில அரசு மத்திய அரசின் தலையீட்டைத் தடுத்து நிறுத்தித் துணிவாக அதைச் செய்துகொடுக்கின்ற முறையில், கல்லூரி ஆசிரியர்களுக்கும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டம் என்பது இந்தியா முழுவதற்கும் இருக்கின்ற ஒரு மத்திய சட்டம். அதை ஒத்துக் கொண்டுதான் மாநிலம் கொண்டு வந்திருக்கிறது. முன்னாலே

ஆட்சேபணையை நாம் ஏன் தெரிவிக்கவில்லை என்று இப்போது கேட்க முடியாது. இப்போது ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆட்சேபணைக்கு விதிவிலக்கு பெற்று நிறைவேற்ற அரசு முயற்சிக்கலாம். மாநில ஆட்சி மத்திய ஆட்சி என்பதுபோல பிரித்துப் பேசக்கூடாது. நாம் இங்கே சுதந்திர ஆட்சி நடத்திக் கொண்டிருப்பது போன்ற கருத்தை மக்களிடத்திலே பரப்புவது போல ஆகும். ஆயுள் இன்ஷூரன்ஸ் சட்டத்தை வடக்கே உள்ள மாநிலங்களும் அமுல் நடத்துகின்றன. அதுபோல நமக்கும் உரிமைகள் இருக்கின்றன. இங்கே சொல்லப்படுகின்ற முறையில் அமுல் நடத்தினால், அதே காரணத்தை வைத்து, வடக்கே உள்ள மாநிலங்கள் செய்தால், சிக்கல் ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இறந்தால் பணம் தருவது என்பதுதான் ஆயுள் ஈட்டு கார்ப்பரேஷன் விதிகளின் கீழ் வருகிறது. அந்த அடிப்படையிலேதான் அவர்கள் ஆட்சேபணை செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜார்ஜ் கோமகன் : இந்த ஆட்சேபணை முந்தைய மத்திய அரசு இருந்தபோது எழுப்பப்பட்டதா அல்லது இப்போது இருக்கின்ற மத்திய அரசால் எழுப்பப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துச் சொல்கிறேன்.

Plus 2 Courses.

* 146 Q.—THIRU A. R. DAMODARAN and Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state the number of High Schools and Colleges in Tamil Nadu where the proposed Higher Secondary Course (plus 2 courses) will be introduced in the academic year 1978-79?

+ 2. படிப்பு.

திரு. ஏ. ஆர். தாமோதரன் & திரு ஜீ. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

1978-79 ஆம் கல்வியாண்டில், தமிழ்நாட்டில் எத்தனை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உயர் இடைநிலைக் கல்வித் திட்டம் (+2 படிப்பு), கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது ?